செ.வெ.எண்: 593 22.7.08

## பத்திரிக்கைச் செய்திக்குறிப்பு

தமிழ்நாட்டில் மாவட்ட மனநல சுகாதாரதிட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், மன நோயாளிகளுக்கும், மனநோய்க்கு எளிதில் இலக்காகும் நபர்களுக்கும் சிறப்பான மருத்துவ சிகிச்சை ஆரம்ப சுகாதார நிலையம், அரசு தாலுக்கா மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலேயே அளிக்கப்பட்டு வருவதாகும். இத்திட்டம் அமுலாவதற்கு முன்பு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலோ, பெருநகரங்களில் உள்ள மனநலமருத்துவர்களிடம் மட்டுமே சிகிச்சை பெறமுடிந்தது. இதனால், அதிகமான பொருட்செலவும், நேரமும், உடன் வருபவர்களின் நேர இழப்பும் ஏற்பட்டு வந்தது. சிகிச்சையின் இடையே தவிர்க்க இயலாத காரணத்தினால் தொடர் சிகிச்சை எடுக்க இயலாத நிலை இருந்து வந்தது. இத்திட்ட அமுலாக்கத்தின் பின்னர், மனநோயாளிகள் அதிக அளவில் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகிலேயே சிகிச்சைப்பெற்றும், குணமடைந்தும் வருகிறார்கள். கீழ்க்காணும் மாவட்டங்களில் மனநல மருத்துவர்களுக்கு தொழில்நுட்ப உதவி அளிக்க உளவியாளர்கள் (Psychologist and Psychiatirc Social Worker) (சமூகநல பணியாளர்) ஒப்பந்த முறையில் தொகுப்பூதியத்தில் பணியாற்ற தேவைப்படுகிறார்கள். தலா ஒரு உளவியாளர் மற்றும் சமூகநல ஊழியர் பணியிடம் கீழ்வரும் மாவட்டங்களில் காலியாக உள்ளன.

## காலியாக உள்ள பணியிடம்

| வ. எண். | மாவட்டம் | உளவியாளர் | சைக்காட்ரிக் சமூகநல ஊழியர் |
|---|---|---|---|
| 1. | மதுரை | - | காலியாக |
| 2. | இராமநாதபுரம் | காலியாக | காலியாக |
| 3 | தேனி | காலியாக | காலியாக |
| 4. | விருதுநகர் | காலியாக | காலியாக |
| 5. | திருச்சி | காலியாக | காலியாக |
| 6. | கன்னியாகுமரி | காலியாக | காலியாக |
| 7. | ஈரோடு | காலியாக | காலியாக |
| 8. | தருமபுரி | காலியாக | காலியாக |
| 9 | நாகப்பட்டினம் | காலியாக | காலியாக |
| 10. | திருவள்ளூர் | காலியாக | காலியாக |
| 11. | காஞ்சிபுரம் | காலியாக | காலியாக |
| 12. | கடலூர் | காலியாக | காலியாக |
| 13. | திருவாரூர் | காலியாக | காலியாக |
| 14. | நாமக்கல் | காலியாக | காலியாக |
| 15. | பெரம்பலூர் | காலியாக | காலியாக |
| 16. | சென்னை | காலியாக | காலியாக |
| | மொத்தம் | 15 பணியிடம் | 15 பணியிடம் |

இப்பணி முழுக்க முழுக்க தற்காலிகமானதாகும். தகுதிகள் மற்றும் தொகுப்பூதியம் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| உளவியாளர் (Psychologist)<br>M Phil (Clinical Psychology)<br>அல்லது MA/M SC உளவியல்<br>(6Months Training in this field) | சமூகநல ஊழியர் (Psychatric Social Worker)<br>MSW/MA சமூகநலப்பணி மனநலம்<br>தொடர்பான பிரிவில்<br>பயின்றோர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும். |

வயது வரம்பில்லை
சொந்த மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

உளவியாளர்களுக்கு மாத தொகுப்பூதியமாக ரூ.8,000/-மும் சமூகநல ஊழியர்களுக்கு மாத தொகுப்பூதியமாக ரூ.5,000/-மும் வழங்கப்படும். விருப்பமுள்ளவர்கள் அவர்களது விண்ணப்பத்தினை 10.08.2006-க்குள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு தங்களின் பெயர், பிறந்த தேதி, கல்வித்தகுதி, சொந்த மாவட்டம், சான்றிதழ்களை (ஜெராக்ஸ் நகல்) இணைத்து தொடர்பு கொள்ளவேண்டிய முகவரியை குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்,
(மத்திய மனநல திட்டம் - தொகுப்பூதிய பணியிடம்)
டி.எம்.எஸ்.வளாகம்,
தேனாம்பேட்டை, சென்னை - 600 006.

…ர்டு, இயக்குநர்,
…தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9